வார்த்தையைக் குறிப்பிட்டார். சென்ற மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக மைனாரிட்டி ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் மீன் வளத் துறைக்கு அவர்கள் ஒதுக்கிய தொகை என்பது ரூ.196 கோடியே 44 இலட்சம் ஆகும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நான்கு ஆண்டு கால ஆட்சியில் ரூ.146 கோடியே 44 இலட்சம் நிதியை ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களின் வாழ்வுக்கு ஒளியைத் தேடித் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***32797—திரு. ஆ.க. அரங்கநாதன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, எனது விடையினை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.*

திரு. ஆ.க. அரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தை வென்றவர், காவியமானவர், தமிழக மக்களின் வேதனை தீர்த்தவர், ஆர்.கே. நகர் தொகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்ற (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றித் திருமகள் எங்களின் இதய தெய்வம் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களின் புனித மலர்ப் பாதம் பணிந்து, திருவண்ணாமலை மாவட்டம், எங்களது கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்னணு நிறுவனம், சென்னை உட்பட, எட்டு இடங்களில் எல்கோசெஸ்களை* (ELCOSEZ) *உருவாக்கியுள்ளது. தமிழகத்தில் உள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த 1,800 நிறுவனங்களில், சுமார் 4,00,000 பணியாளர்கள் நேரடியாகவும், 8,00,000 பணியாளர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.*

மேலும், 1,353.78 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள எட்டு எல்கோசெஸ்களில் (ELCOSEZ), *இதுவரை 884.84 ஏக்கர் நிலம், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 468.94 ஏக்கர் நிலப்பரப்பில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்கள் முழுமையாகப் பங்கேற்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.*

மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி, துரிஞ்சாபுரத்தில், தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா நிறுவனம் அமைக்கப் போதிய இடம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இடம் இருக்கும்பட்சத்தில், தகுதிவாய்ந்த உள் மற்றும் பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர், தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க முன்வரும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண்கள் 148, 149 மற்றும் 150 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிக்கை அளிக்கிறார்கள். அது முடியட்டும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும், சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், உரிமைக்காகவும் தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்துவதிலும், அவர்களது பெருமைகளை வருங்கால சந்ததியினர் அறிந்து*